அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விகாரி ஆண்டு சித்திரை-வைகாசி மே 2019 முரசு 12 ஒலி 143



பிரதி ஒன்றுக்கு ரூ.10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# 153 ஆண்டு தருமசாலை துவக்க நாள் விழா
# மற்றும்
# 34ம் ஆண்டு திருஅருட்பா இசை விழா அழைப்பு



காலையிலே என்றனக்கே கிடைத்தபெரும் பொருளே
களிப்பேஎன் கருத்தகத்தே கனிந்தநறுங் கனியே
மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்
மேவுகின்ற பெரும்பயனாம் விளைவையெலாம் தருமச்
சாலையிலே ஒருபகலில் தந்ததனிப் பதியே
சமரசசன் மார்க்கசங்கத் தலைஅமர்ந்த நிதியே
மாலையிலே சிறந்தமொழி மாலைஅணிந் தாடும்
மாநடத்தென் அரசேஎன் மாலையும்ஏற் றருளே
- திருவருட்பா

அன்பர்களே! சிறு வெளிச்சத்தைக் கொண்டு பெரிய வெளிச்சத்தைப் பெறுவதுபோல் சிறிய தயவாகிய ஜீவ தயவைக் கொண்டே பெருந்தயவாகிய கடவுள் அருளைப் பெறவேண்டும். இதுவொன்றே கடவுளது திருவருளைப் பெறுவதற்கு ஒரே வழி என்பது நம் வள்ளல் பெருமானாரின் அருள்வார்த்தை.

ஜீவர்களாகிய நாம் அனைவரும் இந்த ஜீவதயையை விருத்தி செய்து கடவுள் அருளைப் பெற்று நிறைவான இன்பதைப் பெறுவதற்காக நம் பெருமானார் *பிரபவ வருடம் வைகாசி மாதம் 11ஆம் நாள் (23-05-1867)* அன்று வடலூரில் **சத்திய தருமசாலையைத்** தொடங்கினார்கள். இதனை முன்னிட்டு வருகின்ற **மே மாதம் 23, 24, 25 வியாழன், வெள்ளி, சனி** ஆகிய மூன்று நாட்களும் 153ம் ஆண்டு தருமசாலை துவக்க நாள் விழா மற்றும் 34ஆம் ஆண்டு திருஅருட்பா இசைவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்பர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**நாள்:**
**23, 24, 25**
வியாழன்,
வெள்ளி, சனி



திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரால் நிறுவப்பட்ட சத்திய தருமச்சாலை, வடலூர்

**இடம்:**
வள்ளலார் பெருவெளி அரங்கம், ஞானசபை ஆர்ச் சாலை, வடலூர்.

உயிருள்யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே
உயிர்நலம் பரவுக என்று உரைத்த மெய்ச்சிவமே - அகவல்

# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

## இறைவனது பெருமையை நினைத்தல்

அண்டமெலாம் கண்ணாகக் கொளினும் காண்டற்கு
அணுத்துணையும் கூடாவென்று அனந்த வேதம்
விண்டலறி ஓலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள் வெளியாய் நிறைந்து விளங்கும் ஒன்றே
கண்ட வடிவாய் அகண்ட மயமாய் எங்கும்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவுளே எம்
சண்டவினைத் தொடக்கறச் சின்மயத்தைக் காட்டும்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே.

## நமது சிறுமையை நினைத்தல்

விடைய வாழ்க்கையை விரும்பினேன் நின்திரு
விரைமலர்ப் பதம் போற்றேன்
கடைய நாயினேன் எவ்வணம் நின்
திருக்கருணை பெற்று உய்வேனே
விடையில் ஏறிய சிவபரஞ் சுடர்உளே
விளங்கிய ஒளிக் குன்றே
தடையிலாத பேரானந்த வெள்ளமே
தணிகை எம் பெருமானே.

## பிரார்த்தனை

உடையாய் என் விண்ணப்பம் ஒன்றுஉண்டு கேட்டருள்; உன்னடிச்சீர்
தடையாதும் இன்றிப் புகல்வதல்லால் இச்சகத்திடை நான்
நடையால் சிறுமை கொண்டு அந்தோ பிறரை நவின்று அவர்பால்
அடையாமையும் நெஞ்சு உடையாமையும் தந்து அருளுகவே.

பொருட்பெருந் தனிமெய்ப் போகமே
என்னைப் புறத்தினும் அகத்தினும் புணர்ந்த
தெருட்பெருஞ் சிவமே சுத்த சன்மார்க்கச்
செல்வமே நான்பெற்ற சிறப்பே
மருட்பெருங் கடலைக் கடத்தி என்தன்னை
வாழ்வித்த என்பெரு வாழ்வே
அருட்பெருஞ்ஜோதி அம்பலத்து அரசே
அம்மையே அப்பனே அபயம்.

திருச்சிற்றம்பலம்

# அருள்நெறி

திருஅருட்பா வசனபாகத்திலிருந்து....

**கடவுளது திருவருளைப் பெறுவதற்கு உபாயம் என்ன?**

புத்தி தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும் பெரியாரைத் துணைகொண்டு, அவர் கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது செய்யில் அவ்வருளைப் பெறலாம்.

**அக்கடவுள் தயவாகிய அருள் எத்தன்மை உடையது?**

நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்தினுக்கு நன்மை தீமையை விளக்கிக் காட்டுவதாயும், வேதாகம கலைகளைக் கொண்டு நன்மையாதிகளை விதிப்பதாயும், அறிபவர்களின் தரத்திற்கு ஒத்ததாயும், அறிபவர்கள் எந்த வஸ்துவை அறிகின்றார்களோ அந்த வண்ணமாயும் உள்ளது.

**நன்மை தீமை என்பவை யாவை?** நன்மை தீமை யென்பவை புண்ணிய பாவம். புண்ணியமென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும். பாவமென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின் துக்கமாயும் இருக்கும்.

**பாவங்கள் எவ்வாறு நம்மை வந்து அடைகின்றன?** மனம், வாக்கு, உடல் என்னும் மூன்றினாலும் நம்மை வந்தடைகின்றது.

<u>மனத்தினால் வரும் பாவம்</u>

☆பிறர் மனைவியை தனதாக நினைத்தல்.
☆அன்னியருடைய சொத்தை கிரகிக்க நினைத்தல்.
☆அன்னியருக்குத் தீங்குசெய்ய நினைத்தல்.
☆முடியாத காரியங்களை நினைத்து அக்காரியம்.
☆அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமையடைதல்.

<u>வாக்கினால் வரும் பாவம்</u>

☆பொய்சொல்லல் ☆புறங்கூறல் ☆கோட்சொல்லல் ☆வீணுக்கழுதல்

<u>தேகத்தினால் வரும் பாவம்</u>

☆பிறர் மனைவியை தழுவுதல்
☆புசிக்க தகாத வேத விரோத ஆகாரங்களைப் (மாமிசம்) புசித்தல்.
☆அன்னியர்களை இம்சை செய்தல்,
☆தீங்குசெய்கின்றவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ் செய்தல்.

**துன்பங்கள் சேராமல் தடுத்துக் கொள்வது எப்படி?**

நமக்கு பாவங்கள் வந்தடையும் வழிகளை அடைத்து புண்ணியம் வந்தடையும் செயல்களை இடையறாது செய்து வந்தால் துன்பங்கள் நம்மை அணுகாது.

மனம், வாக்கு, உடலால் வந்தடையும் முன்சொன்ன 12 பாவச் செயல்களைத் தவிர்த்துப் புண்ணியம் செய்யவேண்டும்.

## மனத்தினால் வரும் புண்ணியம்

☆ அன்னியர்களுக்கு நன்மை உண்டாக நினைத்தல்.

☆ பொறாமை அடையாதிருத்தல்.

☆ அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணாதிருத்தல்.

☆ தனது மனைவி தவிர அன்னியமான பெண்களை தாய் சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல்.

## வாக்கினால் வரும் புண்ணியம்

☆ பொய்சொல்லாமை ☆ கோட்சொல்லாமை

☆ இன்சொல்லாடல் ☆ தோத்திரம் செய்தல்.

## தேகத்தினாலுண்டாகும் புண்ணியம்

அன்னியர்களுக்கு தீங்குண்டாகுங்கால் விலக்கல் முதலிய நன்மையான கிருத்தியங்கள் செய்தல். இவை தேகத்தால் உண்டாகும் புண்ணியம்.

## அறிந்து செய்த பாவங்கள்

மனிதர்கள் மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச்செருக்காலும், தாக்ஷண்ய உடன்பாட்டாலும், உணவு பற்றியும், புகழ் பற்றியும், வழக்கம் பற்றியும் பாவச் செய்கைகளைச் செய்கின்றனர்.

## அவை நீங்க

இவ்வாறு அறிந்த பாவங்கள் செய்தபின், "நாம் பாவச் செய்கையை முன்னமே தெரிந்தும் செய்துவிட்டோமே என்று பச்சாதாபப்பட்டுப் பெரியோர்களை அடுத்து, அவர்களால் நியமனம் செய்யப்படும் பிராயச்சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி, யாத்திரையாதி மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களிற் சென்று வசித்து, இயன்ற அளவில் அன்னவிரயஞ் செய்தால் நீங்கும்.

மேலும், சத்தியற்றவர்களாயும் வார்த்திகர்களாயும் உள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாதாபத்துடன் பாவ காரியங்களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்திற் பழகாமலும், திருவருளைச் சிந்தித்து அவர்கள் தரத்திற்கு ஒத்த தெய்வங்களைச் சிந்தித்தால் நீங்கும்.

## அறியாது செய்த பாவங்கள்

அறியாத பாவங்கள் யாவெனில், நடக்குங் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும் தனக்குத் தோன்றாமல் நேரிடும் பாவங்களாம். இதன்றி அவை மனத்திற்குப் புலப்படாமலும் உண்டாகும்.

## அவை நீங்க

இவைகள் யாவும் தினஞ் செய்யுஞ் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்து உபசரித்தலாலும், தெய்வம் பராவலாலும் நீங்கும்.

**பிராயச்சித்தம் முதலியன செய்யாவிட்டால் பாவங்களால் அடையும் கதி என்ன?**

- மனத்தினால் உண்டாகும் பாவங்கட்கு சண்டாளாதி சரீரம் உண்டாகும்.
- வாக்கினால் செய்த பாவங்கட்கு மிருகம் முதலான சரீரம் உண்டாகும்.
- தேகத்தால் செய்த பாவங்கட்கு மரம் முதலான சரீரம் உண்டாகும்.

**வேதாந்திகள், “பாவம் முதலிய கருமங்களும், புண்ணியம் முதலிய ஏதுக்களும் நமக்கில்லை. நாம் சர்வ சாக்ஷி” என்கிறார்களே. அஃதென்ன?**

தேகவாசனை, இந்திரியவாசனை, கரணவாசனை, பிராண வாயுவின் செயற்கையால் உண்டாகும் வேறுபாடு முதிலிய நன்மைகளில் சலிப்பற்று ஆகாரம், நித்திரை, பயம் முதலியவைகளில் தாம் சலித்தும், சோர்ந்தும், திடுக்கிட்டும் இல்லாமல் நிவாத தீபம்போல் விளங்கும் ஜீவன் முத்தர்கள் சமூகத்தில் பாவ கிருத்தியங்கள் நடவா; புண்ணியங்களும் பிரயோஜனம் பற்றிச் செய்யார்கள்; பொன்னும் ஓடும் சரியாகக் (ஒன்றாக) காண்பார்கள். அத்தன்மையுடைய நித்திய முத்த சுத்த ஞானதேக சித்தர்கட்குப் பாவபுண்ணியம் இல்லை.

மேலும், அவர்கள் இந்தப் பவுதிக சரீரத்தில் வசித்தாலும், சரீரமாகிய தத்துவ தாத்விகங்கள் இப்போது நமக்கு அசுத்த தேகமாயும், அசுத்தப் பொறியாயும், அசுத்த கரணமாயும், அசுத்த அனுபவமாயும், அசுத்த அறிவாயும் இருப்பதுபோல் இரா. தத்தப்படத்தைப்போல் காரியத்தில் இலதாயும், காரணத்தில் உளதாயும், அறிவே வடிவாய், அறிவே பொறியாய், அறிவே மனமாய், அறிவே அழகாய், அறிவே உருவாய், அறிவே உணர்வாய், அறிவே அனுபவமாய், அறிவே அறிவாய் விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

# மனுமுறை கண்ட வாசகம்

## மனிதனின் தன் வாழ்வில் செய்யக்கூடாத பாவங்கள்

நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ
நட்டாற்றில் கையை நழுவ விட்டேனோ
வலிய வழக்கிட்டு மானம் கெடுத்தேனோ
வரவு போக்கொழிய வழியடைத்தேனோ
தானம் கொடுப்போரை தடுத்து நின்றேனோ
தருமம் பாராது தண்டம் செய்தேனோ
கலந்த சிநேகரைக் கலகம் செய்தேனோ
களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ
மனம்ஒத்த நட்புக்கு வஞ்சகம் செய்தேனோ
மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ
குடிவரி உயர்த்தி கொள்ளை கொண்டேனோ
குடிக்கின்ற நீருள்ள குளத்தை தூர்த்தேனோ
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ
இரப்போர்க்கு பிச்சை இல்லை என்றேனோ
உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரம் செய்தோனோ
ஊன்சுவை உண்டு உடல் வளர்த்தேனோ
பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ
பொது மண்டபத்தை போய் இடித்தேனோ
ஆசை காட்டி மோசம் செய்தேனோ
அன்புடையவர்க்குத் துன்பம் செய்தேனோ
வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ
வெய்யிலுக்கு ஒதுங்கும் விருட்சத்தை அழித்தேனோ
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ

பகைகொண்டு அயலோர் பயிரை அழித்தேனோ
கோள் சொல்லிக் குடும்பம் கலைத்தேனோ
கலங்கி ஒளிந்தோரைக் காட்டிக்கொடுத்தேனோ
கற்பழிந்தவளைக் கலந்திருந்தேனோ
கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனோ
காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ
கர்பம் அழித்துக் களித்திருந்தேனோ
கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ
கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனோ
குருவை வணங்கக் கூசி நின்றேனோ
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ
பட்சியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ
பெரியோர் பாட்டில் பிழை சொன்னேனோ
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ
தவம் செய்வோரை தாழ்வு சொன்னேனோ
ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ
சிவனடியாரைச் சீறி வைதேனோ
சுத்த ஞானிகளைத் தூஷணம் செய்தேனோ
தந்தைதாய் மொழியை தள்ளி நடந்தேனோ
தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனோ
என்னபாவம் செய்தேனோ இன்னதென்று அறியேனே.

திருச்சிற்றம்பலம்

# அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

# உள்ளது உரைத்தல்

## ஊனுடம்பே ஆலயம்

திருஅருட்பா வசனபாகத்திலிருந்து

**ம**னித தேகத்தில் கோசத்திற்கு இரண்டரை அங்குலத்திற்கு மேல் நாற்சதுரமான ஒரு பையுண்டு. அதில் பதினாறு வயதளவும் உண்டாகும் இந்திரியம் ஜலமாகச் சேருகின்றது. அதைத்தான் **மானசதடாகம்** என்று சொல்லுகின்றது.

பதினாறு வயதிற்குமேல் சேரும் இந்திரியம் உறைந்த அந்த ஜலத்திற்கு மத்தியில் சேருகிறது. அப்படியாகச் சேர்ந்து கொண்டு வரும் இந்திரியம் பொன் வண்ணமாக இருக்கும். அது **தாமரைப்பூ** என்று சொல்லப்படும். அதன் மத்தியில் ஒரு ஆவி சாதாரண காற்றுக்கு நூற்றிலொரு பங்காக வெகு நேர்மையாக இருக்கும். அதன் வண்ணம் பொன் மயமாயிருக்கும். அதற்கு அதிஷ்டான தெய்வம் **பிரமனென்று** சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகும் காலம் அவருக்குச் சகலகாலமென்றும், அடங்கும் காலம் கேவல காலமென்றும் சொல்லப்படும். அந்த ஆவி உண்டாகும் காலத்தில் செயற்கையானால் கருத்தரிக்கும். அது **சிருஷ்டி** என்று சொல்லப்படும்.

அதில் ஆவி உண்டாகத் தொப்புளிலிருந்து ஒரு நாடி தோன்றி அதன் மத்தியில் முகந்துகொண்டிருக்கிறது. அதன் மூலமாய் அக்கினி இருக்கிறது. அது மூலாக்கினி என்று சொல்லப்படும். அது தொப்புளில் இருந்து உண்டாவதால் **விஷ்ணு** தொப்புலில் இருப்பதாகச் சொல்லபடுகின்றது.

அதன் மேல் இரண்டரை அங்குலத்தில் உந்திக்கு நேராக உட்பாகத்தில் சதுரமாய் ஒரு பை உண்டு. புசித்த அன்னத்தை ஐந்து நாழிகையில் பால்போன்ற ஜலமாய் ருத்திர பாகத்திலுள்ள ஆவி பிரித்து அந்தப் பையில் சேர்க்கின்றது. அதை **க்ஷீராப்தி** (பாற்கடல்) என்று சொல்லுகிறது.

அந்தப் பையிலிருக்கும் பால் போன்ற ஜலத்தின் மேல் ஆலிலை வடிவுடைய வயிற்றின் உட்பாகம் படிவதனால் அதே வண்ணமாக ஓர் ஆடை கட்டியிருக்கும். அதை **ஆலிலை** என்று சொல்கின்றது.

அந்த ஆடையின்மேல் ஒரு நரம்பு வட்டமாய்த் தலை தூக்கியிருக்கிறது. அதைச் **சேஷன்** என்று சொல்லுகின்றது.

அந்தக் குண்டலிவட்ட சேஷன் என்னும் நாடி மத்தியில் செம்பினது களிம்பு போன்ற பச்சை மேனியாய் ஒரு சத்தியுண்டு. அதை **விஷ்ணு** என்றும், அச்சத்தியின் முன் பின் நடு என்னும்

இடத்தில் அதன் காரணச் சத்து பொன் வண்ணமாயும், ருத்திர வண்ணமாயும், குங்கம வண்ணமாயும் மூன்று உள்ளன. அவற்றைச் **சீதேவி, பூதேவி, நீளாதேவி** எனச் சொல்லுகின்றது. மத்தியில் ஒரு சத்தி இருப்பதால் **விஷ்ணு மார்பில் லஷ்மியை** வைத்தார் என்பது.

குண்டலி வட்டமான நாடி மத்தியில் உள்ள பச்சை வண்ணமான சத்தியிலிருந்து ஒரு நாடி உண்டாகி இரண்டு தலையாய் விரிந்து ஒரு தலை மேலும், ஒரு தலை கீழும் செல்லுகின்றது. இந்த நாடிகளின் மூலமாய் அந்தச் சத்து மேலே செல்லும்போது பசுமை வண்ணமாகவும், கீழ்ச் செல்லும்போது பீதவண்ணமாகவும் செல்லுகின்றது. மேலே செல்வதினால் ஜீவர்களுக்கு ஜீவிப்பும் அதின் சாரம் கெட்டு கீழே செல்வதினால் ஜீவிப்பின்மையும் உண்டாகின்றது. மேலே செல்வதில் ஜீவிப்பு உண்டாகுவதால் **காத்தல் தொழிலை** உணர்த்துகின்றது.

மேலும், மேலே செல்கின்றதை **விஷ்ணு வைகுந்தம் போகின்றார்** என்றும் கீழே செல்கின்றபோது **க்ஷீராப்தியில் (பாற்கடலில்)** இருக்கின்றார் என்றும் சொல்லுகின்றது. கீழே செல்லும் நாடி முன்சொன்ன தொப்புள் நாடியுடன் கலப்புண்டாகி பிரமனுக்கு உஷ்ணத்தைத் தருகின்றது.

அன்றியும் இந்தச் சதுரமான பையின் வலப்பாகத்தில் ஒரு பையுண்டு. அந்தப் பையில் அக்கினி நிரம்பிக் காரணமாய் இருக்கின்றது. அது புசித்த வஸ்துக்களின் சத்தைக் கிரகித்துக் கொண்டு அசத்தை மலமாக இடது பாகத்தில் சேர்த்துவிடுகின்றது. கிரகித்த சத்தை முன் சொன்ன க்ஷீராப்தி பையில் சேர்க்கின்றது. இதை **வடவாக்கினி** என்று சொல்லுகின்றது. மேலும், இந்த வெள்ளை ஜலத்தை அக்கிரமமின்றிச் சமப்படுத்திப் பிரளயம் வாராது காத்துக் கொண்டிருக்கிறது. இந்த உதராக்கினி குறைவுபட்டு க்ஷீராப்தியில் இருக்கும் ஜலத்தின் தரம் கெடுமானால் நோயுண்டு.

இந்தப் பையாகிய ஸ்தானத்திற்குமேல் இரண்டரை அங்குலத்தில் இருதயத்தில் மலர்ந்த வாழைப்பூப்போல் ஒரு பையுண்டு. அது வெண்மையாய் இருக்கும். இதைக் **கைலாயம்** என்று சொல்கின்றது.

இந்தப் பையுள் முன் சொன்ன காற்றில் பதினாயிரம் கோடி பங்கிலொரு பங்காக வெகு நேர்மையாக அக்கினி மயமாய் ஒரு ஆவி இருக்கும். இதற்குக் காரணாக்கினி என்று பெயர். இவ்வக்கினியைக் **காலசந்திர ருத்திர மூர்த்தி** என்பர்.

இப்பையின் அருகில் இடப்புறத்தில் மலர்ந்த தாமரைப் பூப்போல் ஒரு பையுண்டு. அந்தப் பை பசுமை வண்ணமாயிருக்கும். அதற்கும் முன் சொன்ன வெண்மைப் பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய்க் காரணாக்கினி அதிகப்படுத்தாமலும், குறைவுபடுத்தாமலும் சமப்படுத்தி வைக்கும். இந்த மலர்ந்த பைக்கும் கீழிருக்கும் க்ஷீராப்தி பைக்கும் ஒரு நாடியுண்டு. அதன் மூலமாய் அதற்கு உஷ்ணம் கொடுத்து நிலையில் வைக்கும். இதனால் **ருத்திரனிடத்தில் விஷ்ணு பிறந்தார்** என்று சொல்கின்றது.

இந்த நாடி மூலமாக விஷ்ணு இடமாகிய ஜலத்திலும், பிரமனிடமாகிய இந்திரியத்திலும் உள்ள குற்றங்களைக் கண்டிப்பதால் ருத்திரனை **சம்ஹார கர்த்தா** என்று சொல்வது.

இந்த அக்கினிப் பையில் குண்டலிவட்ட நரம்பு ஒன்று உண்டு. அதில் மூன்றாகப் பிரியும் கிளையுண்டு. அது மூலம் முதல் பிரமரந்திரம் வரையில் இடம், வலம், நடு என்று கத்தரிமாறலாய்ப் பிராண அபானனுக்கு இடம் கொடுத்து ஊடுறுவி நிற்கும். இந்நரம்புகளுக்கு **சோம (சந்திர), சூரிய, அக்கினி** என்று பெயர்.

இஃதன்றி இக்குண்டலிவட்ட நரம்பின் அடியில் இரண்டு நரம்பு வலத்தில் ஐந்து கவருடைய தலையாயும், இடத்தில் ஆறு கவருடைய தலையாயும் நிற்கின்றன. வலத்திலுள்ளது **கணபதி** என்றும், இடத்திலுள்ளது **சுப்பிரமணி** என்றும் பெயர் சொல்வது.

மேற்படி ஐந்து கவருடைய நரம்பிற்குக் கீழ் நோக்கி கிருஷ்ண வண்ணமாய் ஒரு நரம்பிருக்கும். இந்த நரம்பு இடைவிடாது அசைந்து கொண்டிருக்கும். இந்த அசைவால் அக்கினிப் பைக்கு ஆதாரம் உண்டாவதால் இதற்குக் கணபதி என்று பெயர். மேற்படி ஐந்து கவருடைய நாடிக்கு இடம் வலம் இரண்டிலும் **சித்தி தத்துவம், புத்தி தத்துவம்** உண்டு.

இடத்திலுள்ள ஆறு கவருடைய நாடிக்குக் கீழ் அனந்த வண்ணமான நாடி ஒன்று உண்டு. இதற்கு **மயூரம்** (மயில்) என்று பெயர். இந்த நாடியின் அசைவால் எழுபத்தீராயிரம் (72,0000) நாடியும் அக்கிரமமின்றி நிலைபெறுகின்றபடியால், இதற்குச் சேனாதிபதி என்று பெயர். மேலும், வலதுபுறத்து நாடிக்கு அறுபத்திரண்டு மாத்திரையும், இடதுபுறத்து நாடிக்கு நாற்பது மாத்திரையும் அளவு வித்தியாசம் இருப்பதால் இவர்களைச் **சகோதரர்களாகச்** சொல்வதுமன்று மேற்படி **ருத்திராம்சமாகவே** சொல்லுகின்றது.

இருதயத்திற்கு இரண்டரை அங்குல இடமான **கண்டத்தில் மகேசுவரனும்**, அதற்குமேல் இரண்டரை அங்குல இடமான **அண்ணாக்கில் சதாசிவமும்**, அதற்குமேல் இரண்டரை அங்குல உயரத்தில் **புருவமத்தியில் விந்துவும்**, அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் **நாதமும்**, அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் **பரவிந்துவும்**, அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் **பரநாதமும்**, அதற்குமேல் இரண்டரை அங்குலத்தில் **திக்கிராந்தம், அதிக்கிராந்தம், துவாதசாந்தம்** முதலானவைகளும், அதீதத்தில் **சுத்த சிவமும்** உள.

மகேசுவர ஸ்தானம் முதல் விந்து ஸ்தானம் வரையிலும் முன்போல் இடம், நாடி, தொழில், வண்ணம் முதலியவும் உள்ளன. நாதஸ்தானம் தொட்டு துவாத சாந்தம் வரையில் அனுபவ வெளியாகிய ஆகாச பேதமாய் இருக்கும். அதற்குமேல் அதிகாரண மாத்திரமாய் ஆன்ம அனுபவத்தில் விளங்கும்.

மேலும், பிரமஸ்தானம் தொடங்கிச் சுத்த சிவஸ்தானம் வரையில் ஒரு ஸ்தம்பம் இருதயம் வரையில் வாயுநாடி வண்ணமாயும், அதற்குமேல் அக்கினி வண்ணமாயும் இருக்கும். இது அடியில் பருத்து வரவர நேர்மையாய் இந்திரிய கரணங்களுக்குப் புலப்படாமல் அணுவிற்கணுவாய், ஜீவனுக்கும் புலப்படாமல் அகண்டமாய், ஆன்மக் காட்சியில் அருகித் தோன்றுவதாய் இரண்டற நிற்கும். இதற்குச் **சிவா காரண பூரண ஸ்தம்பம்** என்று பெயர்.

முன்சொன்ன இருதய அக்கினி பை அக்கிரமமாய் விரிந்து, விசேஷ அக்கினி ஜ்வாலை விசிரிம்பித்துக் கீழிருக்கும் க்ஷீராப்திப் பையில் இருக்கும் ஜலத்தைச் சுருட்டிக் கொள்ள ஜீவனுக்கு மரண காலம் நேரிடும். மேற்படி பை விரிவதற்கு ஆதாரம் அருந்தல் பொருந்தல். இவை சமமானால் மிருத்தியு (மரணம்) வராது.

**ஈரமும் அன்பும் கொண்டு இன்னருள் பெற்றேன்**
**என்மார்க்கம் இறவாத சன்மார்க்கம் தோழி**
**காரமும் மிகுபுளிச் சாரமும் துவர்ப்பும்**
**கைப்போடே உப்போடே கசப்போடே கூட்டி**
**ஊரமுது உண்டுநீ ஒழியாதே அந்தோ**
**ஊழிதோ றூழியும் உலவாமை நல்கும்**
**ஆரமுது உண்டு என்னோடு ஆடேடி பந்து**
**அருட்பெருஞ்ஜோதி கண்டு ஆடேடி பந்து**

திருச்சிற்றம்பலம்

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

Wings of Wisdom

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

| AYYAPPAN THANGAL | VALASARAVAKKAM | PORUR | OMR | VADAPALANI |
|---|---|---|---|---|
| 26792007 | 42105700 | 42107304 | 42863478 | 42642491 |



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**எங்கே கருணை இயற்கையின் உள்ளன 961**
**அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே 962**

எங்கே கருணை - எங்கெங்கெல்லாம் கருணை

இயற்கையின் உள்ளன - இயற்கையாக, இயல்பாக விளங்குகிறதோ

அங்கே விளங்கிய - அங்கங்கெல்லாம் விளங்குகிற

அருட்பெருஞ்சிவமே - அருட்பெருஞ்ஜோதியே!

கருணை எங்கெங்கே இயல்பாக, இயற்கையாக, விளங்குகிறதோ அங்கங்கெல்லாம் அருட்பெருஞ்ஜோதியும் விளங்குகிறது.

பக்தியே சாதனம் என்பது பழையவழி. கருணையே சாதனம் என்பது வள்ளலார் காட்டும் புதியவழி. பக்தி வேண்டாம் என்று சொல்லவில்லை. வெறும் பக்திமட்டும் போதாது. பக்தியுடன் கருணையும் இருக்க வேண்டும்.

கடவுள் பக்தியோடு உயிர்இரக்கமும் இருக்க வேண்டும். சிவபக்தியோடு சீவகருணையும் இருக்க வேண்டும். சீவ கருணையால் சிவகருணையைப் பெறலாம். சீவர்களிடம் நாம் செலுத்தும் கருணையால் சிவத்தின் கருணையை நாம் பெறலாம். ஆன்ம நேயத்தால் ஆன்மலாபத்தைப் பெறலாம்.

**கருணையும் சிவமுமே பொருள்** என்பது வள்ளற் பெருமான் வாக்கு.

"**கருணையும் சிவமே பொருள்** எனக் காணும்
காட்சியும் பெறுக மற்றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கு அறிவித்த வண்ணமே
பெற்றிருக்கின்றேன்"

"கருணையும் சிவமே பொருள் எனக்கருதும்
கருத்தும் உற்றி எம்மனோர் களிப்ப"

"கருணையே வடிவாய்", "கருணை ஒன்றே வடிவாகி", "கருணை இலா ஆட்சிகடுகி ஒழிக" என்ற அருட்பா வரிகளே இதற்குச் சான்று.

**எங்கே கருணை இயற்கையின் உள்ளன** - நம் உள்ளங்களில் கருணை இயற்கையாக (இயல்பாக) இருக்க வேண்டும். "இயற்கையின்" என்ற ஒரு சொல்லை இங்கே வள்ளற் பெருமான் வழங்குவதை உற்று உணர வேண்டும்.

கருணை, தானாகவே இருக்க வேண்டும். செயற்கையாக இருக்கக் கூடாது. இயற்கையாகவே நம் உள்ளத்தில் அமைய வேண்டும்.

எண்ணம், சொல், செயல் (மனம், வாக்கு, காயம்) ஆகிய மூன்றிலுமே இயல்பாகக் கருணை அமைய வேண்டும். கருணை எண்ணங்கள், கருணைச் சிந்தனைகள், கருணைச் சொற்கள், கருணைச் செயல்கள் அமைய வேண்டும்.

மனத்தில் கருணைமயமான எண்ணங்கள் எழ வேண்டும். வாக்கில் கருணைமயமான வார்த்தைகள் வரவேண்டும். ஆற்றும் செயல்கள் எல்லாம் கருணைமயமானவைகளாக இருக்க வேண்டும்.

இவ்வாறு எங்கெங்கு எல்லாம் இயல்பாகவே கருணை இருக்கிறதோ அங்கங்கு எல்லாம் அருட்பெருஞ்ஜோதி இறைவன் இருப்பார்.

"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"

என்னும் சன்மார்க்க மகாமந்திரம் இதனால்தான் ஏற்பட்டது.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணையாக இருக்கிறது
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதியாக இருக்கிறது.

"சிவமே சிவமே" என்னும் இத்தொடரில், முன்வரியில் ''திருவருட்சிவமே'' என்ற பெருமான், பின் வரிகளில் "சிதம்பரசிவமே", "சிற்சபைச் சிவமே" என்றெல்லாம் கூறுபவர் இங்கே கருணையைக் கூறும் இவ்வரியில் **அருட்பெருஞ்சிவமே** என்றருளினார்.

சிவன் - உருவநிலை

சிவம் - அருவநிலை. பரசிவம் - அருட்பெருஞ்சிவம் - அருட்பெருஞ்ஜோதி என்பன அருவப்பெருநிலைகள். அருட்பெருஞ்ஜோதியே முடிந்த முடிவான பெருநிலை.

**கொல்லா நெறியே குருவருள் நெறிஎனப்**
**பல்கால் எனக்குப் பகர்ந்தமெய் சிவமே**

| | | |
|---|---|---|
| கொல்லா நெறியே | - | எந்த ஓர் உயிரையும் கொல்லாத நெறியே |
| குருவருள் நெறி | - | குருமார்கள் அருளிய நெறி |
| என | - | என்று |
| பல்கால் | - | ஒருமுறை இருமுறை அன்று, பலமுறை |
| எனக்கு | - | எனக்கு |
| பகர்ந்த | - | கூறிய, அருளிய |
| மெய்ச்சிவமே | - | அருட்பெருஞ்ஜோதியே. |

இயற்கையாக கருணை உள்ள இடத்தில் அருட்பெருஞ்ஜோதி இறைவன் இருப்பார் என்ற முந்தைய வரிகளுக்கிணங்க முதற்படியாக விளங்குவது கொல்லா நெறியே.

தமிழகத்தின் பொற்காலம் என்று கூறப்பெறும் சங்க காலத்தில் மக்களிடையே புலாலுணவும் கட்குடியும் மிகுந்திருந்தன. தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் முதன் முதலில் இந்த இரண்டையும் கடிந்தவர் தெய்வப்புலவர் திருவள்ளுவரே. **“புலால்மறுத்தல்”, “கொல்லாமை”, “கள்ளுண்ணாமை”** என்ற மூன்றுக்கும், மூன்று முழு அதிகாரங்களை, பத்துப்பத்துக் குறட்பாக்களை இயற்றினார் திருவள்ளுவர்.

முற்காலத்தில் கொலை புலைகளைக் கடிந்த பெரியோர் இருவர். ஒருவர் மகாவீரர், மற்றொருவர் திருவள்ளுவர். பிற்காலத்தில் அண்மைக்காலத்தில் கொலைபுலைகளைக் கடிந்தவர் வள்ளலார்.

இம்மூவரைத் தவிர வேறு யாரும் இவற்றை இவ்வளவு வன்மையாகக் கண்டிக்கவில்லை.

கொலைபுலைகளை அறவே நீத்தலைத் தம் கொள்கையாகவே வகுத்தார் வர்த்தமான மகாவீரர். வள்ளல் பெருமானார் தமது சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கையாகவே வகுத்தார். சமணத்திலும் சன்மார்க்கத்திலும் முதற்கொள்கையாகவும், முக்கியமான கொள்கையாகவும், அடிப்படைக் கொள்கையாகவும் விளங்குவது புலால் மறுத்தலே.

**உலக சமுதாயத்தில் இன்றைய நிலையில் வன்முறை ஓங்கியிருப்பதற்குக் காரணம் மதுவும் மாமிசமுமே. இவ்விரண்டும் கொலைவெறி அளவுக்கு மக்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன.**

**உலகில் வன்முறை குன்றி அமைதி பெருக வேண்டுமாயின் மது மாமிசம் ஆகிய இரண்டும் அறவே தவிர்க்கப் பெறுதல் வேண்டும்.** சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டு, இறுதியில் அறவே இவை இல்லை என்ற நிலை உருவாக வேண்டும்.

குருமார்கள் பலரும், ஏறத்தாழ எல்லோருமே கொலை நெறியை, புலைநெறியைக் கடிந்தே கூறியுள்ளனர்.

ஓர் உயிரை உண்டாக்குவது நம்கையில் இல்லை. ஏன் அவ்வுயிரைப் போக்கவேண்டும்? ஆக்குபவன்அவன் போக்குவது நாமா?

“கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்” என்கிறார் தாயுமானவர்.

**“கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க**
**எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சை பராபரமே”** என்கிறார்.

கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க வேண்டும் என்பது தாயுமானவரின் இச்சை (விருப்பம்). இப்படித் தன் இச்சையைக் கூறும் தாயுமானவர்,

**"கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லோர், மற்று**
**அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"** என்கிறார்.

கொல்லா விரதம் கொண்டவர்களை நல்லோர் என்று கூறும் தாயுமானவர், அவ்விரதத்திற்கு மாறானவர்களை இன்னார் என்று சுட்டிச் சொல்லவும் விரும்பவில்லை, "யாரோ? அறியேன்" என்று கூறிவிடுகிறார். யாரோ தெரியவில்லை என்கிறார்.

வள்ளலார் அவர்களைப் புறஇனத்தார் என்கிறார். கொலை புலை உடையோர் புறவினத்தார். கொலைபுலை நீத்தோர் அகவினத்தார் என்பது வள்ளற்பெருமானின் கொள்கை. வள்ளலாரது சன்மார்க்கம் கொல்லா நெறி.

வடலூரைப் பாடும் வள்ளலார் "கொல்லாநெறியது, கோடா நிலையது......உத்தர ஞான சிதம்பரமே" என்று உத்தர ஞான சிதம்பர மாலை என்ற பதிகத்தில் பாடுகின்றார்.

கொல்லா நெறியே வள்ளலார் வழி; வடலூர் வழி. அதனால்தான் வள்ளல் பெருமான், "கொலைபுலை தவிர்த்தோர் மட்டுமே உள்ளே புகுதல் வேண்டும்" என்று அவர் கட்டிய சத்திய ஞானசபையின் முகப்பில் எழுதியுள்ளார்.

கொல்லா நெறியே குருஅருள் நெறி எனப் பல்கால் இறைவன் பெருமானாருக்கு கூறியிருக்கிறார் என்பதுதான் இங்கு குறிப்பிடத்தக்கது. இதை நமக்குப் பற்பல இடங்களிற் பகர்கிறார்.

ஏன் இத்தனை அழுத்தமாக ஜீவகாருண்யத்தை வள்ளல் பெருமானார் வலியுறுத்த வேண்டும்? இந்த வினாவிற்கு விடை பகருவதுபோல் பின்வரும் அகவல் வரிகளில் அமைந்துள்ளன.

**உயிருள்யாம் எம்முள்உயிர் இவை உணர்ந்தே**
**உயிர்நலம் பரவுகஎன்று உரைத்த மெய்ச்சிவமே**

| | |
|---|---|
| உயிருள் யாம் | - உயிர்களுக்குள் இறைவன் இருக்கிறார் |
| எம்முள் உயிர் | - இறைவனுக்குள் உயிர்கள் இருக்கின்றன |
| இவை உணர்ந்தே | - இவ்வுண்மையை உணர்ந்தே |
| உயிர்நலம் பரவுக | - உயிர்களுக்கு நலம் செய்க, நல்லனவற்றையெல்லாம் செய்க |
| என்று உரைத்த | - என்று கூறியருளிய |
| மெய்ச்சிவமே | - சத்தியச் சிவமே |

உலக உயிர்களில் எல்லாம் இறைவன் விளங்குகிறான். அந்தராத்மாவாக விளங்குகிறான். எல்லா உயிர்களும் இறைவனுக்குள் (அவனது அருள்வியாபகத்துள்) விளங்குகின்றன.

**உயிருள்யாம், எம்முள் உயிர்** – உலக உயிர்கள் அனைத்தினுக்குள்ளும் கடவுள். கடவுளுக்குள்ளே உலக உயிர்கள் அனைத்தும்! எத்துனை அற்புதமான உண்மையை விளக்கும் ஒரு தொடர்பு! இதை உணர்வாயாக என்று இறைவனே வள்ளலாருக்குச் சொல்லுகிறார்.

உணர்வதோடு மட்டுமல்லாமல் "உயிர்நலம் பரவுக" என்று கட்டளையிடுகிறார். உயிர்நலம் பரவுவதே, கடவுட்பரவல்.

பரவுதல் என்பதற்கு இரண்டுபொருள். 1. பரப்புதல், 2. வழிபடுதல். உயிர்களுக்கு நலஞ்செய்வதே உயிர்நலம் பரவுதல் (பரவலாகச் செய்தல்). அதுவே கடவுட்பரவல், கடவுள் வழிபாடு. உயிர்நலம் பரவுதலே சுத்த சன்மார்க்கம். ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு என்பது வள்ளல் பெருமான் உயிர்குலத்திற்குத் தந்த தாரக மந்திரம்.

உயிர்களிலே கடவுளைக் கண்டவர் வள்ளலார். உயிர்களிலே கடவுளைக் காட்ட வந்தவர் வள்ளலார்.

அகவலின் இவ்விரண்டு அடிகளும் சுத்த சன்மார்க்கத்தின் உயிருக்கு உயிரான வரிகள்.

எனவே அன்பு உள்ளங்களே!

எல்லா உயிர்களுக்குள்ளும் இறைவன் இருக்கிறார்; எல்லா உயிர்களும் அருட்பெருஞ்ஜோதி இறைவனின் அருள் வியாபத்துள் இருக்கின்றன என்பதை உணர்ந்து எல்லா உயிர்களுக்கும் உபகாரம் செய்வதையே கடவுள் வழிபாடெனக் கொண்டு கொல்லா விரதத்தைக் கடைபிடித்து குருவருளையும், திருவருளையும் பெற்று சுகமாக வாழ்வோமாக!

திருச்சிற்றம்பலம்

**கடவுள் அருள் வெளிப்படுவதற்குமுன் அபக்குவிகள் தங்கள் செயற்கையாகிய ராகத்துவேஷாதிகளை (விறுப்பு வெறுப்புக்களை) போக்கிக் கொள்வது உத்தமம். – திருஅருட்பா வசனபாகம்**

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# மூத்தோர் சொல் அமிர்தம்

நீல் ஆம்ஸ்ட்ராங், இவர் தான் நிலவில் முதன்முதலில் கால் வைத்தவர். ஆனால், முதன்முதலில் வைத்திருக்க வேண்டியவர் யார் தெரியுமா? பல பேருக்கு தெரியாது. அவர், எட்வின் சி ஆல்ட்ரின்.

இவர்தான் நிலவுக்கு சென்ற அப்பல்லோ விண்கலத்தின் பைலட். அதாவது விமானி.

ஆல்ட்ரின் அமெரிக்காவின் விமானப் படையில் பணிபுரிந்தவர். மேலும் விண் நடை அனுபவம் உள்ளவர். அதனால், அவர் பைலட்டாக நியமிக்கப்பட்டார்.

நீல் ஆம்ஸ்ட்ராங்க் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். மிகுந்த தைரியசாலி என்பதால்தான் இந்த பயணத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் கோ - பைலட் அதாவது இணை விமானி. இவர்கள் சென்ற அப்பல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும் நாசாவிலீருந்து, ''பைலட் பர்ஸ்ட்'' என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், ஆல்ட்ரினுக்கோ மனதில் சின்ன தயக்கம். இடது காலை எடுத்து வைப்பதா? வலது காலை எடுத்து வைப்பதா? என்றல்ல.

“நிலவில் முதன் முதலில் கால் எடுத்து வைக்கிறோம். புவியீர்ப்பு விசையற்ற இடத்தில் இருக்கிறோம். கால் வைக்கும் இடம் எப்படி இருக்கும் என்று தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்துவிட்டால், எரி மணலாக இருந்து காலை சுட்டுவிட்டால்” என்ற தயக்கத்தில் மணிக்கணக்காககூட தாமதிக்கவில்லை. சில நொடிகள்தான் தாமதித்திருப்பார். அதற்குள் நாசாவில் இருந்து இரண்டாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது, “கோ-பைலட் நெக்ஸ்ட்” என்று. நீல் ஆம்ஸ்ட்ராங் கட்டளை வந்த அடுத்த நொடி காலடி எடுத்துவைத்தார். உலக வரலாறு ஆனார்.

உலக வரலாறு ஒரு நொடி தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது. திறமையும் தகுதியும் இருந்தும்கூட தயக்கத்தின் காரணமாக தாமதித்ததால் இன்று ஆல்ட்ரினை யாருக்கும் தெரியவில்லை. முதலாவது வருபவரைத்தான் இந்த உலகம் நினைவில் வைத்திருக்கும் என்பது மட்டுமல்ல தயக்கம், பயம் இவை எந்த

அளவுக்கு நம் வெற்றியை பாதிக்கும் என்பதற்கு இதுவே உதாரணம். இனி நிலவை பார்க்கும் போதெல்லாம் இந்தச் சம்பவத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு நிமிடத் தயக்கம் நம்முடைய மிகப் பெரிய வெற்றிகளைத் தடுத்துவிடுகிறது.

நாம் எல்லோருமே மிகப்பெரும் சாதனைகளை படைக்கிற வல்லமை உடையவர்கள்தான். நம்முடைய தயக்கம், பயம், கூச்சம் இவைதான் நம் முதல் எதிரி. பலருக்கு தன்னுடைய தவறுகளை களைவதில் தயக்கம். தவறுகளை தட்டிக் கேட்க தயக்கம். அடுத்தவர்களை பாராட்டுவதில் தயக்கம். ஏன் சிலருக்கு இந்த தகவலை நண்பர்களுக்கு பகிர கூட தயக்கம். சரியானதை செய்ய தயங்கினால், தவறானதை தான் செய்து கொண்டிருப்போம். எனவே, நல்ல விஷயங்களில் தயக்கத்தை தவிர்ப்போம்.

**கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கங் கடிந்து செயல்**

**பொருள்:** மனம் தளராமல், ஆராய்ந்து துணிந்து ஏற்றத் தொழிலைச் சோர்வு கொள்ளாமல் காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

---

**ஒ**ரு சுவாமியின் ஆசிரமத்திற்கு நண்பர் ஒருவர் வந்தார்.

அவருக்கு உணவு கொடுக்க விரும்பிய சுவாமிகள், தான் வளர்த்த குரங்கைப் பார்த்து “இலை போடு” என்றார்.

குரங்கு வாழை இலை எடுத்து வந்து போட்டது. உடனே சுவாமிகள் தன் கையில் வைத்திருந்த பிரம்பால் குரங்கின் தலையில் ஓங்கி அடித்தார்.

“சாதம் போடு” என்றார் சுவாமி. குரங்கு சாதம் கொண்டு வந்து பரிமாறியது. திரும்பவும் தலையில் பிரம்பால் அடித்தார்.

அவர் சொன்னதையெல்லாம் சரியாகச் செய்தாலும் அடி விழுந்துகொண்டே இருந்தது. நண்பருக்கு மனம் பொறுக்கவில்லை.

“சுவாமி! குரங்குதான் நீங்கள் சொன்னதையெல்லாம் சரியாகச் செய்கின்றதே. பிறகு ஏன் அந்த வாயில்லாச் சீவனை அடித்துத் துன்புறுத்துகிறீர்கள்?” என்று கேட்டார்.

உடனே சுவாமிகள் எதுவும் பேசாமல் சிரித்துக்கொண்டே பிரம்பை தான் இருந்த பாயின் கீழே ஒளித்து வைத்தார்.

சற்று நேரத்தில் குரங்கு தாவிப் பாய்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவரின் தோளில் ஏறி உட்கார்ந்து கொண்டு, காதை பிடித்து இழுத்தது. தலை முடியைப் பிரித்து பேன் பார்த்தது.

மேலும், சாப்பிட்ட இலையில் வாலைத் தொங்கவிட்டு ஆட்டியது. அதன் தொல்லை தாங்க முடியாத நண்பர், "சுவாமி! என்னைக் காப்பாற்றுங்கள். இந்த குரங்கின் தொல்லை தாங்க முடியவில்லை" என பயத்தால் கதறத் தொடங்கினார்.

உடனே சுவாமிகள் பிரம்பை எடுத்துக் குரங்கின் தலையில் அடித்தார். பிறகு அதுபோய் ஒரு மூலையில் அமைதியாக அமர்ந்தது.

இப்போது நண்பரைப் பார்த்து சுவாமிகள், "இந்தக் குரங்கைப் போலத்தான் மனித மனங்களும். பாராயணம், நாம ஜபம், தியானம், தருமம் செய்தல், சத்சங்கம், சத்விசாரம் என்கிற பிரம்பால் மனமாகியக் குரங்கை அடித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அது அமைதியாக இருக்கும். இல்லையென்றால் நமக்கும், நம்மைச் சார்ந்தவர்களுக்கும் அது துன்பத்தைக் கொடுக்க ஆரம்பித்துவிடும்" என்று கூறினார்.

திருச்சிற்றம்பலம்

## சன்மார்க்கப் பெரும்பதி வருகை

**சு**த்த சிவ சன்மார்க்கம் ஒன்றே இனி எல்லா உலகத்தும் வழங்கும் இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்ற பெருநெறி வழக்கம் இக்காலம்தொட்டு அளவிறந்த நெடுங்கால வரையில் வழங்கும். அதன்மேலும் அதன்மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும், சாத்திரபேதங்களும், ஜாதி பேதங்களும், ஆசாரபேதங்களும் போய் சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம்.

இப்போது வருகின்ற கடவுள் இதற்குமுன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படி சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தலைவர்களும், எல்லாக் கடவுளரும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்து அருளுகின்ற தனித்தலைமைப் பெரும்பதி.

இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளைப் நான் பெறுவேன், பெறுகின்றேன், பெற்றேன். என்னை அடுத்த தாங்களும் பெறுவீர்கள், பெறுகின்றீர்கள், பெற்றீர்கள். அஞ்சவேண்டாம்.

**– திருஅருட்பா வசனபாகம்.**

திருச்சிற்றம்பலம்

## திருமந்திரம்

விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின்று உருக்கி ஓர்ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பு அறுத்தானே.

*"**அ**ண்ட முதலான்" எனக் குறிக்கப்பட்ட அனைத்து உலகிற்கும் முதல்வனாகிய இறைவன், முன்னாளில் மேல்நிலையிலிருந்து இறங்கி, என் வினைக்கேற்ற வகைகளாகத் தனது உண்மை நிலையை மாற்றிக் கொண்டு, கீழ்நிலையில் நின்ற தனது சத்தியை எனக்குப் பெருங்காவலாக அமைத்து தனது ஒப்பற்ற தனிப் பேரின்பத்தைத் தரும் அருள் நோக்கத்தை இன்று எனக்கு அளித்து, என் உள்ளத்தில் நீங்காது நின்று, அதனை அன்பினால் கசிந்து கசிந்து உருகப்பண்ணி, எனது மலம் முழுவதையும் பற்றற நீக்கினான்.*

பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே.

*__ப__தி, பசு, பாசம், எனக் கூறப்படும் மூன்று பொருள்களுள், பதி ஆகிய இறைவன் எவ்வாறு தோற்றம், முடிவு இல்லாதவனோ, அவ்வாறே பசுவாகிய உயிரும், பாசம் ஆகிய மலங்களும் தோற்றம், முடிவு அற்றவை. ஆனால், உயிரும் மலங்களும் தாமே சென்று இறைவனை நெருங்கவியலாது. இறைவன் உயிருக்கு அருளினால், அதன் பசுத்தன்மையும், அதனைப் பிணித்துள்ள மலங்களும் ஒரு கணமும் நில்லாது நீங்கும்.*

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சன்னதியிற் சுடுமாறுபோல்
ஆரியன் தோற்றம் முன் அற்ற மலங்களே.

*__உ__யிரும் மலங்களும் முறையே சூரியகாந்தக் கல்லும், அதனைச் சூழ்ந்துள்ள பஞ்சும் போன்றவை. பஞ்சைச் சூரிய காந்தம் எரிக்காது. ஆனால், சூரியன் இருந்தால், அதன் ஒளியைச் சூரியகாந்தம் வாங்கிப் பஞ்சைச் சுடும். அது போல, குரு அருளினால், உயிர் தன்னைப் பிணித்த மலங்களை நீக்கும்.*

சாத்திரத்தில் சிறந்தது திருமந்திரம் – வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

# எல்லோர்க்கும் நன்றாம் பணிதல்

**– திருஅருட்பா வசனபாகம்**

ஆசாரியானுக்கு சிஷ்யன் வந்தனம் செய்வதற்கும், பெரியவர்களுக்குச் சிறியவர் வந்தனம் செய்வதற்கும், எல்லவர்க்கும் ஞானிகள், யோகிகள், சாந்தர்கள் வந்தனம் செய்வதற்கும் காரணமும், அதன் பிரயோஜனமும் யாதெனில்:-

**“வந்தனம் செய்வது ஆயுள் விருத்திக்கும் அறிவு விளக்கத்திற்கும் ஆதாரமாய் இருக்கின்றது.**

**சிஷ்யனுக்கும், சிறியோருக்கும் ஆசாரியனும், பெரியோரும் வந்தனம் செய்தால் ஆயுள் விருத்தியும் அறிவு விளக்கமும் குறைவாகும்.”**

இதற்கு சம்பந்தம் யாதெனில், ஒரு ஜீவனுக்கும் திருவிளக்கிற்கும் சம்பந்தம் இருக்கின்றது. எப்படியெனில், ஒரு திருவிளக்கு எரிவதற்கு நல்ல உஷ்ண சம்பந்தமான தைலம் உதவுகின்றதுபோல் ஒரு ஜீவனுக்கு ஆன்ம விளக்கத்திற்கும், மலப் போக்கிற்கும் ஆதாரமான நிர்அகங்காரம் என்கிற நல்ல உஷ்ண சம்பந்தமான தைலத்தை ஊட்டி விளக்கு வைக்க வேண்டியது. ஆனால் மேற்சொன்ன இரண்டும் சந்திக்கும்போது நோக்கமான கெட்ட உஷ்ணத்தைச் சம்பந்தப்படுத்தினால் லாபம் செய்யாதோ எனில், செய்யாது. திருவிளக்கு ஜல உஷ்ணத்தையும் காற்றினால் உண்டாகும் உஷ்ணத்தையும் பெற்றால் கெடும். அதுபோல், ஜீவனுக்கு மும்மலத்தாலாகிய உஷ்ணத்தையும் இன்னும் பற்பல பேதமுள்ள கெட்ட உஷ்ணத்தையும் சம்பந்தப்படுத்தினால் கெட்டுப்போய்விடும். இது யாவருக்கும் திருஷ்டாந்தமாய் இருக்கிறதல்லவா?

இவற்றால் ஆசாரியனையும், பெரியோர்களையும் சிஷ்யனும் சிறியவர்களும் வணங்கினால் ஆயுள் விருத்தியும் சிஷ்யனையும் சிறுவர்களையும் ஆசாரியரும் பெரியவர்களும் வணங்கினால் ஆயுள் குறைவும் உண்டாகும் என்கிற சம்பந்தம் எப்படியெனில்:-

திருவிளக்கு எரிய சாதாரண காலத்தில் அதம பக்ஷத்துக்குரிய கொட்டை எண்ணெய், இலுப்பை எண்ணெய் முதலியவற்றால் விளக்கு வைக்கின்றதும், கொஞ்சம் விசேஷ காலத்தில் நல்லெண்ணையால் விளக்கு வைக்கின்றதும், கடவுள் சந்நிதானத்திலும் ஞானாசிரியர் சந்நிதானத்திலும் பசுவின் நெய்யிட்டு விசேஷ விளக்கத்தை உடைய விளக்கு வைக்கின்றதும் போல்.

கொட்டை எண்ணெய் முதலாகியதற்கு ஒப்பாகிய ஒரு ஜீவன் அதமபக்ஷம், மத்திம பக்ஷத்திற்குரிய ஒவ்வொரு மலத்தினால்

உண்டாகிய தோஷத்தைப் போக்கிக் கொள்வதில் ஆத்ம விளக்கத்திற்கு ஆதாரமாகிறதும், விசேஷமாய் கடவுளாதி ஆசாரியர் சந்நிதானத்தில் வைக்கும் நெய் விளக்கிற்கு ஒப்பான மும்மலப் போக்கான சுத்த நிர்அகங்காரம் என்கிற தைலத்தை ஆன்மாவிற்கு உண்டாக்கி வைப்பதில் ஜீவவிருத்தியும் உண்டாகின்றது.

திருவிளக்கில் அதன் உஷ்ண சம்பந்தமான தைலங்களை விட்டுக் கொண்டு வருவதில் விளக்கு எரிந்துகொண்டு இருப்பது போலும், அதில் நல்லெண்ணை, நெய் முதலியவை விட்டு எரிப்பதில் விசேஷப் பிரகாசமாய் விளக்கு எரிவது போலும், ஜீவனுக்கு அதன் உஷ்ண சம்பந்தமான மும்மலப் போக்கை உண்டுபண்ணுவதில் ஜீவிப்பு விருத்தி உண்டாகின்றதும், விசேஷ நிர்அகங்காரம் என்கின்ற சுத்த உஷ்ணத்தை உண்டுபண்ணிக் கொண்டு வருவதில் ஜீவனுக்கு விசேஷ விளக்கத்திற்கு உரிய ஜீவிப்பு இருந்துகொண்டு இருக்கிறது. இதனால்தான் தைலத்தைக் கொண்டிருக்கின்ற திருவிளக்கு விருத்தி ஆவதுபோல், மும்மலப்போக்கைக் கொண்ட ஜீவனும்ஆயுள் விருத்தி அடைகின்றது.

ஆதலால் ஆசாரியரையும், பெரியோர்களையும் சிஷ்யனும், சிறியோரும் வணங்குவதில் நிர்அகங்கார சக்தி பெறுவதனால் ஜீவனுக்கு ஆயுள் விருத்தி உண்டாகின்றது.

சிஷ்யனையும், சிறியோரையும் ஆசாரியரும், பெரியோரும் வணங்குவதில் ஆயுள் குறைவு எப்படி உண்டாகிறது எனில்:-

ஒருமணி வரையில் எரியத்தக்க எண்ணெய் இட்டு எரிவித்திருக்கும் சிறிய திருவிளக்கிற்குச் சமீபத்தில் ஒரு பெரிய பந்தத்திற்கு ஒப்பான பெரிய திருவிளக்கை வைத்து எரித்தால், ஒருமணி நேரம் எரியத்தக்க அந்தத் தீப உஷ்ணத்தைப் பெரிய தீபம் கிரகித்துக் கொள்வதில் அரை மணிக்குள் எரிந்துவிடுவதுபோல், பெரிய தீர்வர்த்திக்கு ஒப்பான ஆசாரியர், பெரியோர் என்கின்ற யோக்கியதையோடு, நிர்மலரகிதமான நிர்அகங்காரம் என்கின்ற மத்தாப்புக்கு ஒப்பான விளக்கத்தைச் சிறிய விளக்கமான சிஷ்யன், சிறியோர் முன்னிலைக்கு வைப்பதில் சின்ன விளக்கு அடைந்த குறைவைப்போல் ஜீவனுடைய ஜீவவிருத்தியை குறைக்கின்றது. இந்த நியாயத்தால், ஆசாரியரும் பெரியோரும் சிஷ்யனையும் சிறியோரையும் வணங்கினால் ஆயுள் குறைவடையும் என்று திருஷ்டாந்தமாய் இருக்கின்றது.

ஞானி யோகி இவர்கள் சிறியோரையும், சிஷ்யனையும் வணங்கினால் ஆயுள் குறைவு வரமாட்டாது என்றது எப்படியெனில், மேற்குறித்தவர்களது விளக்கத்திற்கு மேற்பட்ட விளக்கம் இவர்களுக்கு அகத்தில் உண்டாகுமானால் ஆயுள் விருத்திக்கு குறைவு வரமாட்டாது.

இதற்குத் திருஷ்டாந்தம்:- சமயச் சார்பில் பரமசிவம் சுப்பிரமணிய சுவாமியிடத்தில் அனுக்கரகம் பெற்றிருப்பதும், ஞானிகள் மாட்டுச் சம்பந்த சுவாமிகளை அந்தச் சுவாமிகளின் தாய் தந்தையர் வணங்கியதும், அப்பர் சுவாமி முதலியோரும் வணங்கியதும் உணர்க. மேலம், சமயமதாதீத ஞானிகளுக்கும் சமய மதங்களுக்கு உட்பட்ட பெரியோர்களுக்கும் இவ்வுலகத்தின்கண் உள்ள ஜீவராசிகளின் தேகமாதி யாவும் தமது பதியின் தூல சூக்குமம் ஆதலாலும், தமது பரிபூரண ஆன்ம அனுபவத்தின்கண் தோன்றிய அனுபவங்களாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாதலாலும், எல்லாம் அவர்களுக்கு தாமன்றி இரண்டற்று இருப்பதாலும், எல்லாவற்றையும் இவர்கள் அத்துவிதத்தில் சிவமெனக் கண்டு உணர்தலாலும், இவர்கள் சென்றவிடம் எல்லாம் கண்டு சிவமாயும் தாமாயும் நீக்கமறக் கைகூப்புவது இயற்கை.

ஆதலால், மலசகிதர்களான ஜீவர்கள் மதிப்புடையவர்கள் ஆதலால் ஆசாரிய சிஷ்ய பாவத்தில் வணங்கலாதி தொழிலால் ஜீவிப்பின்மையும் விருத்தியும் உண்டாகின்றன. மகான்கள் கைகூப்புவதில் ஆன்ம விருத்தி குறைவுபடாது. ஜீவர்களின் அறிவு விளங்கும். ஏனெனில் அவர்கள் சங்கல்பம் சுத்தமாதலால் இவர்களை மேலேற்றும்.

திருச்சிற்றம்பலம்

# மனித தேகத்தின் மாண்பும் நோக்கமும்

மனித தேகம் மற்ற ஜீவ தேகம் போல இலேசிலே எடுக்க முடியாது. மனித தேகத்தில் ஆன்ம விளக்கமும் அருள் விளக்கமும் மிகவும் விளங்குகின்றது. இந்த மனித தேகம் போனால் மீளவும் இந்தத் தேகம் வரும் என்கின்ற நிச்சயம் இல்லை. இந்த மனித தேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாகும். இந்த மனித தேகம் மாத்திரமே முதல் சிருஷ்டி தொடங்கி கடவுள் சம்மதத்தால் சிருட்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவுடைய தேகம்.

எல்லா அண்டங்களையும், எல்லாப் புவனங்களையும், எல்லாப் பொருட்களையும், எல்லா ஜீவர்களையும், எல்லா ஒழுக்கங்கங்களையும், எல்லாப் பயன்களையும் தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கம் செய்விக்கின்ற கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வை அடைவதே இம்மனிதப் பிறப்பின் நோக்கமாகும். -திருஅருட்பா வசனபாகம்

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை அரசு மருத்துவமனையில் கஞ்சி வார்த்தல் | -ரூ.2,000/- |
| காலை அன்னதானதிற்கு | -ரூ.2,500/- |
| மதிய சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.8,500/- |
| மதிய அன்னதானதிற்கு | -ரூ.5,000/- |
| இரவு சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.7,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானதிற்கு | -ரூ.15,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு நாளைக்கு) | -ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) -15லி | -ரூ.1,900/- |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through: HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**+91 9487454688**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# ஆன்மீக சத்சங்க விழா

## பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்



நினைந்து நினைந்து...
உணர்ந்து உணர்ந்து...
என்னுரிமை நாயகனே என்று வனைந்து
வனைந்து ஏத்துதும் நாம் வம்மின்...

– திருவருட்பா

நிகழும் விகாரி வருடம் வைகாசித் திங்கள் 12ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (26.05.2019) அன்று

- **திருவருட்பா அகவல் பாராயணம்** - சன்மார்க்க அன்பர்கள்
- **சிறப்பு சத்சங்கம்** - சன்மார்க்க சாதுக்கள்
- **பக்தி** **தியானம்** **ஜோதி வழிபாடு**

*போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது*

26
மே/2019
ஞாயிறு

**இடம்:** அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**தொடர்புக்கு:** +91 8838540176, +91 7502026565, +91 8940396760



அன்பர்கள் அனைவரும் இந்த ஞான வைபவத்தில் தங்கள் குடும்பத்தினருடன் கலந்துகொண்டு "கேள்வி விருந்தருந்தி" என்ற வள்ளற் பெருமானாரின் வாக்கிற்கிணங்க நாம் அனைவரும் இந்த அரிய ஆன்மீக தகவல்களை செவியுற்று, வாழ்க்கையில் கடைபிடித்து எல்லா மேன்மைகளையும் அடைய அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்பர்கள் கவனத்திற்கு!**

அகவல் பாராயணத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் முதல் நாள் இரவே (சனிக்கிழமை) வந்து தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

**குருவருளும் திருவருளும் பெற அனைவரும் வாரீர்! வாரீர்!!**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly May 2019, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# வடலூர் மாதப்பூசம்

**25.05.2019** – வைகாசி 11 – சனி –
வள்ளல் பெருமானார் வடலூரில்
சத்திய தருமச்சாலை துவக்கிய நாள்
(23-05-1867)

**07.06.2019** – வைகாசி 24 – வெள்ளிக்கிழமை

**04.07.2019** – ஆனி 18 – வியாழக்கிழமை

**31.07.2019** – ஆடி 15 – புதன்கிழமை

**28.08.2019** – ஆவணி 11 – புதன்கிழமை

**24.09.2019** – புரட்டாசி 07 – செவ்வாய்க்கிழமை

தொடர்புக்கு: 88385 40176, 63801 11475

*அனைவரும் வருக! குருவருள் பெறுக!!*

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

**552/6A,** வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865